



அமரர்

# வல்லிபுரம் ஆச்சிமுத்து

23.04.2019

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சங்கானை யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும்
ஜெயபுரம், பூநகரி கிளிநொச்சியை
வசிப்பிடமாகவும் கொண்ட

# அமரர்
# வல்லிபுரம் **ஆச்சிமுத்து**

அவர்களின் சிவபதப்பேறு குறித்து 31 ஆம்
நாள் நினைவுப் பேழை

**23.04.2019**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எமது அன்புத் தெய்வத்தின்**
**பாதார விந்தங்களுக்கு**
**இந்நூல் சமர்ப்பணம்**

# சமர்ப்பணம்

அன்பின் ஒளிவிளக்காய்,
அறிவுக்கு அத்திவாரமாய்,
பண்புக்கு இலக்கணமாய்,
சேவைக்குப் படிக்கட்டாய்,
பாசத்தின் உறைவிடமாய்,
குடும்பத்தின் ஒளிவிளக்காய்,
வாழ்ந்து மறைந்தாலும்
மறவாத நினைவில் நீங்காத
எமது அன்புத் தெய்வத்தின்
திருப்பாதங்களுக்கு இந்நூல்
சமர்ப்பணம்.

**ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!**



**பிள்ளைகள்**
**பேரப்பிள்ளைகள்**
**பூட்டப்பிள்ளைகள்**
**பாட்டப்பிள்ளைகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# " வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"

## அன்புத்தெய்வம்

மண் மகிழ
24
03
1918

கண் நெகிழ
24
03
2019



அமரர்

## வல்லிபுரம் ஆச்சிமுத்து

அன்பு கொண்ட உங்கள்
உயிர் எம்மை விட்டு போனதம்மா!
ஆலமரம் சாய்ந்ததினால்
விழுதுகள் இங்கு வாடுதம்மா!
இனிய உங்கள் அன்புக்குரல்
நிதமும் காதில் ஒலிக்குதம்மா!
தனித்து எமை வாழவிட்டு
இன்று நீ போனதுவும் நியாயமா அம்மா!
உறவுகள் எத்தனை இருந்தென்ன?
உலகிலே தேறுதலால் ஒருபோதும்
தேறிடாது அம்மா எம்மனம்
தேடினாலும் காண்போமா உங்கள்
இனியமுகம்?...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்







## விநாயகர் துதி

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது – பூக் கொண்டு
துப்பார் "திருமேனித் தும்பிக்கை யான்" பாதம்
தப்பாமற் சார்வார் தமக்கு.

## தேவாரம்

தாயினும் நல்ல தலைவர் என்றடியார் தம்மடி
போற்றிசைப்பார்கள்
வாயினும் மனத்தும் மருவி நின்றகலா
மாண்பினர் காண்பலவேடர்
நோயிலும் பிணியும் தொழிலர் பால்நீக்கி
நுழைதரு நூலினர் ஞாலம்
கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த
கோணமாமலை அமர்ந்தாரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

பால் நினைந்தூட்டும் தாயினும்
சாலப்புரிந்து நீபாவியேனுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்தமாய
தேனினைச் சொரிந்து புறம்புறம்திரிந்த
செல்வனே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவதினியே!

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றஎம் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் றன்னைக் கண்டுகண் டுள்ளம்
குளிர என் கண்கள்குளிர்ந்த தனவே

## திருப்பல்லாண்டு

குழலொலி யாழொலி கூத்தொலி ஏத்தொலி
எங்கும் குழாம் பெருகி
விழவொலி விண்ணளவுஞ் சென்று
விம்மி மிகுதிரு வாரூரின்
மழவிடை யார்க்கு வழிவழியாளாய்
மணஞ் செய் குடிப்பிறந்த
பழஅடி யாரொடுங் கூடி எம்மானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்
பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல்
உன்னையென்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும்
நான் மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும்போது உன்னடியின்
கீழ் இருக்க என்றார்.

## திருப்புகழ்

இறவாமற் பிறவாமல் எனையாள் சற்குருவாகிப்
பிறவாகித் திறமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனே சற்குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வளாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறையரசுசெய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

## தேற்றம்

மாந்தருக்குள் தெய்வமென வந்த காந்தி மகாத்மா கஸ்தூரிபாயுமெங்கே? தீந்தமிழில் நீதிகளைத் தெளிவாய்த் தந்த தேவர் திருவள்ளுவர் வாசுகியுமெங்கே காந்தமென வந்த எங்கள் கருணை உள்ளம் வல்லிபுரம் ஆச்சிமுத்துவுக்காகவும் நான் தினமுமிதை மறந்து நின்று அறமே நலம் பெற்று வாழ்ந்தினிது தேறுவோமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர். வல்லிபுரம் ஆச்சிமுத்து அவர்களின்

## வாழ்வுச் சரிதையின் சில துளிகள்

கிளிநொச்சி பூநகரி, கிராஞ்சி என்னும் கிராமத்தில் வசித்து வந்த நாகமுத்து யாழ்ப்பாணம் சங்கானையில் உதித்த பொன்னம்மாவை மணமுடித்து வாழ்ந்து வரும் நாளில் அழகான அன்பான ஒரு பெண் குழந்தை 1918.03.24 அன்று இப்பூவுலகை வந்தடைந்தது. நாகமுத்து பொன்னம்மா தம்பதியினர் ஆச்சிமுத்து எனப் பெயர் வைத்து காத்து வந்த வேளையில் ஆச்சிமுத்துவிற்கு முதலாவது வயது வந்த போது காலத்தின் கோலத்தால் நாகமுத்து இறைவனடி சேர்ந்தார். தந்தையை இளவயதிலேயே இழந்த ஆச்சி முத்து தாயின் அரவணைப்பில் நற்பண்புகள் நிறைந்தவராய் வாழ்ந்து வரும் வேளையில் ஏழுவயதில் பொன்னம்மா இறைவனடி சேர்ந்தார். தாயுமின்றி தந்தையுமின்றி தவித்த ஆச்சி முத்துவிற்கு ஆறுதலாக சிறிய தந்தை ஆகிய மாரிமுத்து என்பவர் வளர்ந்து வந்தார். சிறிய தந்தையின் வளர்ப்பில் வாழ்ந்து வந்த ஆச்சிமுத்துவிற்கு யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டையில் உதித்த கணபதி இலட்சுமி தம்பதியர் மகன் வல்லிபுரம் என்பவரை 1933 இல் மணமுடித்து வைத்தனர். வல்லிபுரம் ஆச்சிமுத்து தம்பதியர் சந்தோசமாக வாழ்ந்து வந்த வேளையில் பிள்ளைச் செல்வங்களாக சுப்பிரமணியம், அப்பாக்குட்டி, இரத்தினம், யோகநாதன், பவளம், கிருஸ்ணபிள்ளை, மதுரம், தங்கராசா ஆகிய எட்டுச் செல்வங்களைப் பெற்றெடுத்தார்கள்.

பிள்ளைகளை அன்னுடனும் அரவணைப்புடனும் கல்வி புகட்டி தொழில் கற்பித்து நல்ல பண்புடையவர்களாக வளர்த்தார். பண்பு அவர்கள் திருமணப் பருவம் அடைந்தவுடன் மணமுடித்து வைத்து வாழ்விற்கு வழிகாட்டியாக வாழ்ந்து வந்தார். எல்லாப் பிள்ளைகளோடும் சமமாக அரவணைத்து அவர்கள் வாழ்வைப் பார்த்து மகிழ்ந்தார். 40 பேரப்பிள்ளைகளைக் கண்டு மகிழ்ந்தார். இவ்வேளையில் வல்லிபுரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2000 ஆண்டு இறைவனடி சேர மிகவும் மனமுருகினாள். பிள்ளைகளுடன் வாழ்ந்து வந்த இவர் ஒரு விருட்சமாக 99 பூட்டப்பிள்ளைகள் வாழ்வைப் பார்த்து பெருமிதம் அடைந்தார். பூரிப்புடன் வாழ்ந்த இவருக்கு இவரது 6 வது மகன் கிருஸ்ணப்பிள்ளை 2007 ஆம் ஆண்டு கொடியநோயின் தாக்கத்தினால் இறைவனடி சேர அளவற்ற வேதனையில் இருக்க இவருக்கு இன்னுமோர் அதிர்ச்சி காத்திருந்தது. 2014 ஆம் ஆண்டு மூத்தமகன் சுப்பிரமணியம் இறைவனடி சேர்ந்தமையைத் தாங்காது புழுவாய்த் துடித்தார். இவ்வாறாக வாழ்ந்து வந்த இவர் 16 பாட்டப்பிள்ளைகளையும் கண்டு மகிழ்ந்தார். வல்லிபுரம் ஆச்சிமுத்து தம்பதியிர் சுமங்கலியாக வாழ்ந்த வேளையில் பல திருமண வைபவங்கள், புதுவீட்டுச் சடங்குகள், கோயில் திருவிழாக்கள் என்பவற்றை நடத்தி வைத்து அனைவரது விருப்புக்களைச் சேகரித்து எல்லோரும் விரும்பத்தக்கவர் என்பதை பெருமையுடன் கூறலாம். இவ்வாறு 101 வயது கடந்து ஆலமரம் போல் கிளைபரப்பி விட்டு பெருவிருட்சமாய் கடந்த 2019.03.24 அன்று தனது பிறந்த நாளில் இறைவனடி சேர்ந்தார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரத்துவம் அடைந்த வல்லிபுரம் ஆச்சிமுத்து அவர்களின் பிரிவு குறித்த இரங்கற் பாக்கள்

# பிள்ளைகள் புலம்பல்

நெஞ்சிருத்தி மடியிருத்தி மழலை கேட்டு
நேயமெல்லாம் தந்தவரே – அம்மா நீங்கள்
துஞ்சுமட்டும் பாசத்தின் பிணைப்பினோடு
சேர்ந்திருந்து வாழ வழி காட்டி நின்றீர்
பாயுதிங்கே கண்ணிரண்டும் அருவியாக
பதைபதைக்கிதையோ நெஞ்சம் புழுபோல
சாயுமென்றே சாயலிலும் நம்பவில்லை
சாய்ந்து விட்டீர் என்ன செய்வோம்
திசைகெட்டுத் தவிக்கின்றோம். தேம்புகின்றோம்
ஓயுமென்று நம்பவில்லை கொண்ட சோகம்
உருக்குலைந்து துவழ்கின்றோம் – அம்மாவே
பஞ்சுபடர் நெருப்பெனவே நெஞ்சம் வேக
பறந்ததென்ன – மாயமையை கடலில் வந்த
நஞ்சு கலந்த இறைவனடி நாடி நீரோ
நல்லமைதி அமைய அங்கு வேண்டுகிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருமக்கள் புலம்பல்

பெருகிப் பாய்கின்ற கண்ணில் நீரும்
பிரியமுள்ள மருமகள் என்றழைத்த வாயும்
கருகித்தான் போனதுவோ மாமி
நெஞ்சு கலங்கியழுகின்றோம்
மருமக்கள் என்றாசையாகக் கூவும்
வாய்மொழியும் இனிக் கேட்கத்தான் முடியுமோ?
தருமத்தின் வடிவான மாமி நீங்கள்
நாங்கள் தவித்தழுதல் அல்லாமல் என் செய்வோம்
கடுஞ்சொல்லால் எமை என்றும் கூறமாட்டாய்,
கருணையே வடிவான எங்கள் மாமியே!
நீலச்சடைமுடியான் பாதம் சரணடைய
வணங்குகின்றோம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேரப்பிள்ளைகள் புலம்பல்

கட்டி அணைத்து காதலுடன்
மொழி பேசினீர் அம்மம்மாவே
முட்டி முத்தமிட்டு முழுநிலவில்
அமுதூட்டி வளர்த்தீர்
எட்டி அழவைத்த
எம் அருமை அம்மம்மாவே
கட்டையில் வைத்து கொடும் தீயினை
இட்டனரே - முட்டி மோதுகிறோம்
ஆச்சி என அன்பாக நாம் அழைத்த
எம் குல விளக்கே!
பல கிளைகள் பரப்பி விட்ட
பெரு விருட்சமே!
இனித்திடப் பேசும் எங்கள்
இனியதோர் ஆச்சியே!
நினைத்திருக்காத வேளை
நீ உயிர் போக்கி விட்டாய்.
தவியாய்த் தவிக்கின்றோம்.
இனி உன் திருமுகத்தை எங்கு காண்போம்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேரன் சற்குணராசா (அவுஸ்ரேலியா) புலம்பல்

மனத்தினைத் துயரம் தாக்கி
மாய்க்க நான் வதங்குகின்றேன்
பனித்திரை வாழ்வாயிற்றே
பதறி நான் கலங்குகின்றேன்
பாதகனாம் எமன் உந்தன் உயிர் பறித்த
பதை பதைக்கும் சேதிதனை அறிந்திங்கே
வேதனையில் துடித்தழுது வெம்புகின்றேன்;
விழுந்த உடல் தான் காணது ஏங்குகிறேன்.
காதவழி கடந்து வந்தும் கண்ணில் முடியாக்
கவலையினால் கலங்குகிறேன்.
உடனிருந்து உதவிகளைச் செய்யவில்லை;
ஓடினையோ தலைவிதிக்கு என் செய்வேன்?
நெடும் பயணம் போயினையோ? – ஆச்சியே
மீண்டும் எம் குலத்தில் வந்து பிறப்பாயே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## *பேரன் ரவிச்சந்திரன் (இந்தியா) புலம்பல்*

அறுகு போல் வேர் கொண்ட
அழியாத பாசக்குன்றே!
உறவுக்காய் வாழ்ந்தாயம்மா!
மறவாத நிலைத்த அன்பில் வாடுகிறோம்
நிலவாக நிற்கும் தாயே!
நினைவலைகள் சேரட்டும் உங்கள் பாசத்தில்
அருகிருந்து அணைக்கவில்லை
அல்லல்பட்டு அழுகிறேன்.
தேற்ற மொழியின்றித்
தேம்பி அழுகிறேன்.
அப்பா அம்மாவுடன் சேர்ந்திருந்து
என்றும் எம்மை வழிநடத்துவீர்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூட்டப்பிள்ளைகள்

ஆதரவாய் எம்மோடு அளவளாவி
அன்புதனைப் பொழிந்திட்ட ஆசைப் பூட்டம்மாவே
அன்போடு அப்பம், இனிப்பு, பலகாரம்
சுவையாய் எமக்களட்டி மகிழும் பூட்டியே!
பாசத்தாற் பாத்தி கட்டி பண்பு எனும் நீர் ஊற்றி
அப் பாத்தியில் கொடி விட்டு நாம் படர
பார்த்து மகிழ்ந்தாய் பூட்டாச்சியே!
கண்டவுடன் கட்டியணைத்து தலை தடவி
முத்தமிட்டு புன்சிரிப்புடன் உணவளிமத்து அனுப்புவாய்
குலவிளக்கு அணைந்ததென்று
குமுறி அழுகின்றோம் – பூட்டியே!
ஆலமரம் சாய்ந்ததென்று அலறி அழுகிறோம்
எண்ணித்தான் பார்க்கின்றோம்
எப்படித்தான் ஆனதென்று.
விழி நீர் கசிந்து விம்மி அழுகின்றோம்.
சுடர் விட்டு பிரகாசித்த பெருவிளக்கு
அணைந்ததுவோ? – பூட்டம்மாவே!
விதியோ? காலனின் சதியோ?
இறைவனே? உன்பாதம் சேர்ப்பாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாட்டப்பிள்ளைகள் புலம்பல்

அன்பு மிக்க பண்புடனே அனைவரையும் வசிகரித்து
ஆற்றல் மிகு செயற்திறனால் ஏற்றமது கண்டவரே!
சுழக்களித்த உறவுகளைக் கை விட்டுச் சென்றதேனோ?
தேற்றமொழியின்றி தேம்பி அழுகின்றோம்.
அளவளாவி அரவணைக்கும் அன்புப் பாட்டம்மாவே!
கலையாத உங்கள் முகமும் குலையாத சிரிப்பும்,
நிலையான நற்பண்பும் சிலையாக நெஞ்சில் நிற்க
நீங்கள் நிலையற்றுப் போனீர்களோ?
ஓடிக்கொண்டிருக்கிறது உங்கள் நினைவுகள்
மீள முடியாத நினைவுகளை மீட்டிப் பார்க்கின்றோம்.
காலனுக்கு என்ன அவசரமோ?
அணைத்து விட்டான் எம் ஒளி விளக்கை.
ஏத்தி அவன் தாள் பணிவோம்
அங்கமைதி காணவென பூட்டம்மாவே!







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அயலவர் புலம்பல்

ஊருக்கு நல்லவர்
அயல் சுற்றமெல்லாம்
யாருக்கும் நல்லவர் – எங்கள் ஆச்சி முத்து
பாருக்குள் இவர்போல
பண்புடையோர் இல்லையாமே
யாருக்கும் இவர் பிரிவு
நலமான உள்ளமதை வாட்டிற்றாமே
அன்புக்கரமீந்து ஆதரித்தே
எமை வளர்த்து தெம்பு பல கூறி
தேற்றியே எமை வளர்த்தாய்.
இந்தப் பெருவிளக்கை
எப்பிறப்பில் காண்போமோ







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராஞ்சி கிராம மக்கள் புலம்பல்

குடும்பத்தின் விழவெள்ளி போல வந்த
குணமான சகோதரியே!
அடுத்தவர்கள் மனம் கோணாதவாறு – மிக்க
ஆதரவினோடு நிதம் பழகிக் கொண்டீர்.
கொடுத்துதவும் ஆசையன்றிக் கொடுமையேதும் கொண்டறியாத்
தெய்வமே!
சேதி கேட்டுத் துடித்தழுது
வந்துனது பிணம் கண்டு
சோகம் மிக நாம் கலங்கி துவள விட்டாய்
அழத்தழுது மாய்கின்ற நிலைமை தந்தாய்
ஐயையோ என் செய்வோம்?
எங்கிருந்த போதிலும் நீ எமக்கு
துன்பம் என்றறிந்தால்
துடிதுடித்து ஓடி வந்து
உடன் பிறந்தோர்க்கில்லா உரிமையோடு
எங்கள் துயர் தீர்க்கும் உத்தமியே?
எழில் மிகுந்த உன் திருமுகம்
இனி எப்போ காண்போம்?
பெற்ற எம் பிதா மாதா போல அன்பு
பிரியமொடு பாசமதைக் காட்டி நாளும்
குற்றமது புரிந்தாலும் கோணிடாது
கூறுமொரு புத்திமதி பலவும் சொல்லி
பற்றொளிரப் பரிந்தெம்மோடு உறவுகொண்டு
பழகிய எம் பெறாத்தாயே?
எம் வீட்டில் நற்காரியங்கள் பல நீ செய்தாய்
அத்தனையும் செழிப்பாய் நிலைத்திருக்கிறது.
திங்கட் சடைமுடியான் திருவடிக்கீழ்
நித்திய சுகம் அடைவாய் அம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்ச விருட்சம்

வல்லிபுரம் + ஆச்சிமுத்து

| சுப்பிரமணியம் + இலட்சுமி | அப்புகுட்டி + சின்னத்தங்கம் | இரத்தினம் + பரமானந்தம் | யோகநாதன் + தெய்வநாயகி | பவளம் + பாலசிங்கம் | கிருஸ்ணபிள்ளை + புஸ்பவதி | மதுரம் + ஜயம்பிள்ளை | தங்கராசா + வதனி |
|---|---|---|---|---|---|---|---|
| செல்வராணி | ஜெயக்குமார் | அழகேஸ்வரன் | யோகேஸ்வரன் | சிவனேஸ்வரன் | வதனி | அற்புதராணி | பானுப்பிரியா |
| தயாரறஞ்சன் | விஜயகுமார் | சத்தியசீலன் | விஜயராணி | பிரபாகரன் | வனிதா | சந்திரகுமாரி | வாணுப்பிரியா |
| ரவிச்சந்திரன் | | சற்குணராசா | நிமலாம்பிகை | விமலராணி | வசந்தினி | | |
| ரூபராணி | | சற்குணராணி | சத்தியபாமா | நகுலராணி | வரதறஞ்சினி | | |
| கமலராணி | | தங்கேஸ்வரி | அஞ்சலாதேவி | தவராணி | | | |
| கேதீஸ்வரி | | தங்கேஸ்வரன் | அபிமன்னன் | யோகராணி | | | |
| | | லட்சுமிகாந்தன் | பரந்தாமன் | குணதீஸ்வரன் | | | |
| | | பாக்கியராசா | | யசோதரன் | | | |
| | | சந்திரகுமாரி | | | | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூட்டப்பிள்ளைகள்

- செல்வராணி + தர்மலிங்கம் → துஸ்யந்தன், ஜெயந்தன், தாரணி, விஜிதரன், சசிதரன், தனுஜினி, தனுசாந், ரகுவரன், நிசாந், தினேஸ்
- தயாறஞ்சன் + சுகந்தி → யட்சன், மனோஜன், தனுசன், தனுஸ்ரலா
- ரவிச்சந்திரன் + மேகலா (இந்தியா) → கோசலியா, றோமிலா, லதி, டன்சன், அண்ணா, விதுசா
- ரூபராணி + உதயகுமார் → நிக்ஷன், ஜீவன், டிலானி, சிவானி
- கமலராணி + சிவனேஸ்வரன் → யதுர்சிகா, தர்சிகா, சஜீவன், தேனுசன்
- கேதீஸ்வரி + பிரபாகரன் → யேசாந், சுடர்நிலா

- ஜெயக்குமார் + கனகாம்பிகை → சியாந்தினி, யனுசன், டர்ஜினி
- விஜயகுமார் + றாஜேஸ்வரி → பிரியந்தினி, பிரியங்கா, திலக்சனா, கேனுசா, பவித்
- அழகேஸ்வரன் + வசந்தராணி → குகனேஸ்வரன், சிவரூபா, மதரசன், கிரிதரன், நிறோஜினி, நிர்மலன்
- சத்தியசீலன் + சரஸ்வதி → சுதாசிகா, ரகுவரன், ஜெசிதரன், றசிதரன், கசிதா
- சற்குணராசா (அவுஸ்திரேலியா) + நிர்மலா → நிலக்சிகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூட்டப்பிள்ளைகள்

- சற்குணராணி + யோகேந்திரன் → தியாநந், கஜனிகா, ஜனனிகா, பூமிகா
- தங்கேஸ்வரி + சற்குணராசா → சிந்துஜன்
- தங்கேஸ்வரன் + வனிதா → சிந்துசா, வினுஜன், சாருஜன், சாதுரியன், சஞ்சயன்
- லட்சுமிகாந்தன் + கவிப்பிரபா → லதுர்ஜன், அபிநயா
- யோகேஸ்வரன் + புஸ்பரதி → யோகேந்திரன், யஸ்மிலா, நிர்மலா, அனோஜன், அருளினி, கஸ்மிலா, கவினா
- விஜயராணி + உதயகுமார் → தனீஸ்குமார், பிரதீஸ்குமார், பிரியதர்சினி, அருண்குமார், தருண்குமார்

- சத்தியபாமா + அரசகுமார் → கார்த்திகா, சயனுசன்
- நிமலாம்பிகை + பாசகுமார் → தர்சினி, நிதுர்சன், டிலக்சன்
- அபிமன்னன் + செல்வஸ்ரா → கயாளன், வியாசன்
- அஞ்சலாதேவி + இதயறாஜ் → அபிசேகன், ஜெபநேசன்
- பரந்தாமன் + யேந்தினி → புருசோத்
- விமலராணி + யெயபாலசிங்கம் → அனுஜன், அபிசாமினி, நிலோசன், துசாரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பூட்டப்பிள்ளைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| தவராணி | யோகராணி | வசந்தினி | வரதறஞ்சினி | அற்புதராணி |
| + | + | + | + | + |
| பிரபாகரன் | சசிக்குமார் (லண்டன்) | மெய்யழகன் | சுகந்தன் | சுமன் |
| ↓ | | ↓ | ↓ | ↓ |
| கிந்துஜன் காவியா | | துவாகரன் துர்க்கா | சானுசா | மதுசனா |

வினோ + [illegible]

## பாட்டப்பிள்ளைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| துஸ்யந்தன் | ஜெயந்தன் | சசிதரன் | தாரணி | விஜிதரன் | சிவரூபா |
| + | + | + | + | + | + |
| சுதாசிகா | தனறஞ்சினி | நிதர்சிகா | சாந்தன் | வினித்தா | விநாயகமூர்த்தி |
| ↓ | ↓ | ↓ | ↓ | | ↓ |
| நிதுர்சியா லதுர்சியா | மதுசன் மதுசனா தர்சனா | கிசான் | சகானா | | தருண் கிசான் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாட்டப்பிள்ளைகள்

- யதுர்சிகா + யனுஜன் → வர்சிகா
- தர்சினி + நிசாளன் → திஸ்மியா
- யஸ்மிலா + திலிபன் → கிருசாந்
- யோகேந்திரன் + றொசானி → தருண்
- நிர்மலா + ஜெகதாஸ் → நிறோசன்
- ஜென்சிகா + தனீஸ் → தனுசாளினி

- டன்சன் +
- சியாந்தினி + றஜீவன்
- யெனிசிகா + மயூரன்

| | |
|---|---|
| பிள்ளைகள் | - 08 |
| பேரப்பிள்ளைகள் | - 40 |
| பூட்டப்பிள்ளைகள் | - 99 |
| பாட்டப்பிள்ளைகள் | - 16 |

### அமரர்கள்

| | | |
|---|---|---|
| | கிருஸ்ணபிள்ளை | |
| வல்லிபுரம் | பரமானந்தம் | மெய்யழகன் |
| சுப்பிரமணியம் | பாலசிங்கம் | வசந்தினி |
| இலட்சுமி | சற்குணராசா | கிரிதரன் |
| சின்னத்தங்கம் | பாக்கியராசா | ஜெபநேசன் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லவை சில

சந்திப்புக்கள் தற்செயலானவை
பிரிவுகள் தவிர்க்க முடியாதவை

நம்பிக்கை இல்லாத வாழ்க்கை வேர் அற்ற
மரம்போல் ஆகும்.

அபிப்பிராயம் கொடுப்பதை விட
அபிப்பிராயம் கேட்பது மேல்.

செல்வமும் புகழும் கடல் நீரைப் போன்றது
அதைக் குடிக்கக் குடிக்க தாகம் அதிகமாகும்.
பணிவு இல்லையேல் மனித குலம் இருக்க முடியாது

உண்டு நீ நீதிபதியாய் இரு உண்மையில் நீ
மகிழ்ச்சியாய் இருப்பாய்

வாய்ப்புக் கிடைக்கும் போதே நன்மை செய்
நீ நினைக்கும் போது வாய்ப்புக் கிடைக்காது

தமக்கென வாழ்வோர் சிறியர்
பிறர்க்கென வாழ்பவர் பெரியோர்.

உழைப்பு உடலைப் பலப்படுத்தும்
கஸ்டங்கள் மனதை பலப்படுத்தும்..

நமக்கென பொய்சொல்பவன்
நமக்கு எதிராகவும் பொய் சொல்வான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்தியத் தலைவர்கள் எழுதிய நூல்கள் :

| | | |
|---|---|---|
| ➢ Hindu Swaraj | - | மகாத்மா காந்தி |
| ➢ Discovery of India | - | ஜவர்ஹலால் நேரு |
| ➢ Indian Struggle | - | சுபாஷ் சந்திரபோஸ் |
| ➢ India Divided | - | இராஜேந்திர பிரசாத் |
| ➢ Unhappy India | - | லாலா லஜபதி ராய் |
| ➢ Wake Up India | - | அன்னி பெசன்ட் |
| ➢ Indian in Transition | - | எம்.என்.ராய் |
| ➢ India Wins Freedom | - | மௌலானா அபுல் கலாம் ஆஸாத் |
| ➢ War of Indian Independencs | - | வி.டி.சவார்க்கர் |
| ➢ An Idealist View of Life | - | டாக்டர் ராதாகிருஷ்ணன் |
| ➢ My Truth | - | இந்திராகாந்தி |
| ➢ My Life and Times | - | வி.வி.கிரி |
| ➢ India 2020 - A Vision for the New Millennium | - | ஏ.பி.ஜெ.அப்துல்கலாம் & Dr. Y.S.Rajan |
| ➢ Ignitedminds | - | ஏ.பி.ஜெ.அப்துல்கலாம் |

## ஆங்கில இலக்கியம் :

| | | |
|---|---|---|
| ➢ Paradise lost | - | ஜோன் மில்டன் |
| ➢ Paradise Retained | - | ஜோன் மில்டன் |
| ➢ The Tale of Two Cities | - | சார்ல்ஸ் டிக்கன்ஸ் |
| ➢ David Copperfied | - | சார்ல்ஸ் டிக்கன்ஸ் |
| ➢ Oliver Twist | - | சார்ல்ஸ் டிக்கன்ஸ் |
| ➢ Great Expectations | - | சார்ல்ஸ் டிக்கன்ஸ் |
| ➢ Conterberry Tales | - | ஜியோஃபரி சாஸர் |
| ➢ Remeo and juliet | - | வில்லியம் ஷேக்ஸ் பியர் |
| ➢ Antony and Cleopatra | - | ஷேக்ஸ்பியர் |
| ➢ The Tempest | - | ஷேக்ஸ்பியர் |
| ➢ Macbeth | - | ஷேக்ஸ்பியர் |
| ➢ king lear | - | ஷேக்ஸ்பியர் |
| ➢ A Midsummer Night's Dream | - | சேக்ஸ்பியர் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எமது குடும்பத் தலைவியாய், குல விளக்காய், அன்பின் திருவுருவாய், பண்பின் சிகரமாய், தன்னை உருக்கி எம்மை வளர்த்து நல்வழியில் வழி நடாத்தி வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வமாகி விட்ட எமது அன்புத் தெய்வத்தின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டு ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தித்த நல்ல உள்ளங்களுக்கும், நேரில், தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியவர்கட்கும், கண்ணீர் அஞ்சலி, துண்டுப்பிரசுரங்கள் வெளியிட்டவர்கட்கும், உதவி புரிந்த உறவினர்கட்கும், அயலவர், நண்பர்கள், சுற்றத்தாருக்கும் அனுதாகச் செய்தி அனுப்பி உள்ளக் குமுறல்களை வெளிப்படுத்திய அன்பு நெஞ்சங்களிற்கும், சந்தர்ப்பங்களுக்கு ஏற்றவாறு பல வழிகளிலும் உதவி புரிந்த நல்லவர்கட்கும், மேலும் இம்மலரினை அச்சிட்டு உதவிய வேழன் பதிப்பகத்தினருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், பாட்டப் பிள்ளைகள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனுபவம் என்பதே அறிவு



பிறப்பில் வருவது யாதெனக் கேட்டேன்
பிறந்து பாரென இறைவன் பணித்தான்
படிப்பெனச் சொல்வது யாதெனக் கேட்டேன்
படித்துப் பாரென இறைவன் பணித்தான்
அறிவெனச் சொல்வது யாதெனக் கேட்டேன்
அறிந்து பாரென இறைவன் பணித்தான்
அன்பெனப்படுவது யாதெனக் கேட்டேன்
அளித்துப் பாரென இறைவன் பணித்தான்
பாசம் என்பது யாதெனக் கேட்டேன்
பகிர்ந்து பாரென இறைவன் பணித்தான்
மனையாள் சுகமெனில் யாதெனக் கேட்டேன்
மணந்து பாரென இறைவன் பணித்தான்
வறுமை என்பது யாதெனக் கேட்டேன்
வாடிப் பாரென இறைவன் பணித்தான்
இறப்பின் பின்னது யாதெனக் கேட்டேன்
இறந்து பாரென இறைவன் பணித்தான்.

அனுபவித்தே தான் அறிவது வாழ்க்கையெனில்
ஆண்டவனே நீ ஏன் எனக் கேட்டேன்
ஆண்டவன் சற்று அருகில் நெருங்கி
அனுபவம் என்பதே நான் தான் என்றார்.

**கவிஞர்-கண்ணதாசன்**



வேழன் பதிப்பகம், கிளிநொச்சி .021 228 5579

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org